பக்கங்கள் 6 விலை சதம் 40

# ஈழநாடு
THE EELANAADU

மலர் 29 மார்கழி 18 முரசம் 21 இதழ் 323
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 2-1-78




● நள்ளிரவுச்செய்தி

## இந்திய விமான விபத்து!
### 200 பேர் பலி?

பம்பாய், ஜன. 1

பம்பாயிலிருந்து டுபாய் நோக்கி புறப்பட்ட ஏர் இந்திய ஜெட்விமானம் கடலில் விழுந்தது என்று இன்று நள்ளிரவு அறிவிக்கப்பட்டது.

விமானத்தில் 200 பிரயாணிகள் இருந்தனர்.

கடலில் விழுவதற்கு முன்னர் விமானம் வெடித்ததாக முன்னர் வெளியான செய்திகள் தெரிவித்தன.

# நிவாரண உதவிப்பணம்: பிரதமருக்கு கோரிக்கை

## "யாழ். அரசாங்க அதிபரின் நடவடிக்கையை நிறுத்துக"
### பேரவையில் நாளை கேள்வி எழுப்பப்படும்

(யாழ்ப்பாணம்)

**இனக்கலவரத்தினால் பாதிக்கப்பட்டமக்களுக்கு வழங்கப்பட்டுவந்த நிவாரண உதவிப்பணம் யாழ். செயலகத்தில் தற்போது நிறுத்திவைக்கப்பட்டுள்ளது. இது சம்பந்தமான யாழ். அரசாங்க அதிபரின் 'தடை' நடவடிக்கை உடன்நிறுத்தப்பட்டு, பாதிக்கப்பட்டமக்களுக்கு யாழ். செயலகத்தில் முன்னர் போல உதவிப்பணம் வழங்க உடன் நடவடிக்கை எடுக்கவேண்டும்.**

தீவுப்பகுதி தேசியஅரசுப் பேரவை உறுப்பினர் பண்டிதர் கா. பொ. இரத்தினம் பிரதமர் திரு. ஜே. ஆர். ஜயவர்த்தனவுக்கும், சமூக சேவைகள் அமைச்சர் திரு. அசோக கருணாரத்தினவுக்கும் மேற்கண்ட கோரிக்கையை விடுத்துள்ளார்.

**பேரவையில் முன்னறிவித்தல்**

நாளை செவ்வாய்க்கிழமை கூடவிருக்கும் தேசியஅரசுப் பேரவையில் ஒத்திவைப்பு நேரத்தின்போது, மேற்கண்ட விபரம் சம்பந்தமாகக் கேள்வி கேட்பதற்கும் பண்டிதர் கா. பொ. இரத்தினம் முன்னறிவித்தல் கொடுத்துள்ளார்.

பிரதமருக்கும் சமூகசேவைகள் அமைச்சருக்கும் அவர் அனுப்பிவைத்துள்ள மகஜரில் மேலும் தெரிவிப்பதாவது,

"ஆகஸ்ட், செப்டம்பர் மாதங்களில் தலைதூக்கிய இனக்கலவரத்தினால் பாதிக்கப்பட்ட தமிழ் மக்களுக்கு யாழ். செயலகத்தில் நிவாரண உதவிப்பணம் வழங்கப்பட்டு வந்தது. யாழ். அரசாங்கஅதிபர் திரு. டபிள்யு. ஏ. எல். விஜயபாலாவின் உத்தரவுக்கிணங்க இப்பணம் வழங்குவது நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதுடன், நிவாரண உதவிப் பணத்தை பாதிக்கப்பட்டவர்கள் அவர்கள் வசித்த அந்தந்த மாவட்டக்கச்சேரிகளில் மட்டுமே [அங்கு சென்று] பெற்றுக்கொள்ளுமாறு பணிக்கப்பட்டுள்ளனர். இந்த நடவடிக்கை உடன் நிறுத்தப்படவேண்டும். இதுவரையும் பின்பற்றப்பட்ட முறைக்குமாறாக அரசாங்க அதிபர், வன்செயல்களினால் பாதிக்கப்பட்ட மக்களை மீண்டும் பாதிக்கப்பட்ட இடங்

(6-ம் பக்கம் பார்க்க)

## தாலிக்கொடி, சங்கிலி வழிப்பறி!

(யாழ்ப்பாணம்)

பஸ்ஸிலிருந்து இறங்கிய பெண் ஒருவரிடமிருந்து தாலிக்கொடி, சங்கிலி கொள்ளையடிக்கப்பட்டது.

இச்சம்பவம் நேற்றுமுன்தினம் மாலை தொல்புரம் பகுதியில் இடம்பெற்றுள்ளது. இச்சம்பவம்பற்றிய விசாரணையில் இருந்து தெரியவந்துள்ளதாவது:

நேற்றுமுன்தினம் காரைநகரில் இருந்து தொல்புரத்துக்கு இ. போ. ச. பஸ்ஸில் பயணம் செய்த இராசம்மா [வயது 33] என்ற இப்பெண் தொல்புரத்தில் பஸ்ஸில்இருந்து இறங்கிய சமயம் அவ்விடத்தில் சைக்கிளில் நின்ற வாலிபர் ஒருவர் திடீர் என இப்பெண்மணியின் கழுத்திலிருந்த ரூ 8,500 பெறுமதியுள்ள தாலிக்கொடி, சங்கிலியை கொள்ளை அடித்துச்சென்றுவிட்டாராம்.

இதுதொடர்பான விசா

(6-ம் பக்கம் பார்க்க)

## "வடக்கு கிழக்கில் தமிழில் நிர்வாகம்"

(கொழும்பு)

சிறுபான்மை இனத்திலிருந்து நாட்டின் உபஜனாதிபதி தெரிவு செய்யப்படும் விதத்தில் அரசியல்சாசனத்தில் திருத்தம் செய்யப்படவேண்டும் என ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் கோரியுள்ளது.

ஹட்டனில் நடைபெற்ற ஜனநாயக தொழிலாளர் காங்கிரஸ் கூட்டத்தில் அரசியல் சாசனத்தில் கொண்டுவரப்படவேண்டிய திருத்தங்கள் பற்றி ஆராயப்பட்டது.

அடிப்படை உரிமை பற்றிய விடயத்தில், மக்களிடையே எவ்வித பாகுபாடும் காட்டப்படக்கூடாதென்றும், சிறுபான்மையினரின் மொழி, பொருளாதார, கலாச்சார, சமூகஉரிமைகள் பாதுகாக்க வழிசெய்யப்பட வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் தமிழ்மொழியில் நிர்வாகம் நடக்கவும், சகலதமிழர்களும் தமிழில் அனுப்பும் கடிதங்களுக்கு தமிழில் பதில்பெறவும், நீதிமன்றங்களில் தமிழில் பதில்பெறவும், நீதிமன்றங்

(6ம் பக்கம் பார்க்க)

### இந்திரா ஆதரவாளரின்
## காங்கிரஸ் மாநாடு
### புதுடில்லியில் ஆரம்பம்
### முக்கிய பிரமுகர்கள் வரவில்லை

புதுடில்லி, ஜன. 1

திருமதி இந்திராகாந்தியின் ஆதரவாளர்களின் இரண்டு நாள் மாநாடு இன்று புதுடில்லியில் ஆரம்பமானது.

இம்மாநாட்டில் சோஷலிஸம், சமயசார்பின்மை என்பன தம்குறிக்கோள் என்று தெரிவிக்கப்பட்டது.

மகாத்மா காந்தி, ஜவகர்லால் நேரு ஆகியோரின் இலட்சியங்களைப் பாதுகாத்து காங்கிரஸைப் பலப்படுத்துவது தம் நோக்கம் என்றும் கூறப்பட்டது.

ஜனதா கட்சி காங்கிரஸை அழிக்க முயல்வதாக மாநாட்டில் குற்றஞ்சாட்டப்பட்டது.

மாநாடு யாருக்கும் எதிரானதல்ல என்றும் தெரிவிக்கப்பட்டது.

**முக்கிய பிரமுகர்கள் வரவில்லை**

இன்று ஆரம்பமான (இந்திரா ஆதரவு) காங்கிரஸ் மாநாட்டிற்கு பிரபல மாநிலத் தலைவர்களோ அல்லது, அகில இந்திய காங்கிரஸ் கமிட்டியின் முக்கிய பிரமுகர்களோ வரவில்லை. காங்கிரஸ் கமிட்டியின் மொத்த உறுப்பினர்களான 650 பேரில் சுமார் 300 பேர் இன்றைய மகாநாட்டிற்குச் சமூகமளித்திருந்தனர் என்று மகாநாட்டு வட்டாரங்கள் தெரிவித்திருந்தபோதிலும், 120 பேர் மட்டுமே கலந்துகொண்டனர் என்று பார்வையாளர்கள் கருத்து வெளியிட்டனர்.

**மூப்பனர் கலந்துகொண்டார்**

இன்றைய மகாநாட்டுக்கு வந்திருந்தவர்களில் உத்தரப்பிரதேசம், தமிழ்நாடு, பீகார் மாநிலங்களின் முக்கிய காங்கிரஸ் தலைவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். தமிழ்நாடு காங்கிரஸ் கட்சித் தலைவர் திரு. ஜி. கருப்பையா மூப்பனாரும் கலந்துகொண்டார்.

......

**கம்யூ. கட்சி வெற்றி**

புதுடில்லி, ஜன. 1

திரிபுரா சட்டசபைத் தேர்தலில், மார்க்ஸிய கம்யூனிஸ்ட் கட்சி வெற்றிபெற்றுள்ளது.

## கார்ட்டர் இந்தியா விஜயம்: முதல் சுற்றுபேச்சு நடந்தது

புதுடில்லி, ஜன. 1

இந்தியாவுக்கு விஜயம் செய்துள்ள அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜிம்மி கார்ட்டர் இன்று மாலை எதிர்பாராத வகையில் இந்தியப்பிரதமர் திரு மொரார்ஜி தேசாயுடன் முதல் சுற்றுப் பேச்சுக்களை நடத்தினார். பேச்சுக்கள் 45 நிமிட நேரம்வரை நடைபெற்றது.

இன்று பிற்பகல் இங்குவந்துசேர்ந்த அமெரிக்க அதிபர், நாளை திங்கட்கிழமைதான் உத்தியோகபூர்வமாக பாரதப் பிரதமருடன் பேச்சுக்கள் நடத்த ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.



புதுடில்லி ராம்லீலா மைதானத்தில் இன்றுபிற்பகல் அமெரிக்க அதிபர் சுமார் 50,000மக்கள் முன்னிலையில் உரை நிகழ்த்துகையில், பாரதத்தலைவர்களுடன் தாம் நடத்தவிருக்கும் பேச்சுக்கள் உலக அமைதியை வலுப்படுத்த உதவும் என்றும், ஒழுக்கம் நேர்மைக்கு இந்தியத்தலைவர்கள் உதாரணமாகத் திகழ்கின்றார்கள் என்றும்; ஜனநாயகம், மனிதஉரிமைகளைப் பேணிப்பாதுகாப்பதில் இருநாடுகளும் உறுதிபூண்டிருக்கின்றன என்றும் கூறினார்.

இதற்கு முன்னர் அமெரிக்க அதிபர் புதுடில்லி வந்துசேர்ந்

(6ம் பக்கம் பார்க்க)

### உள்ளே....

0 ஆசிரிய தலையங்கம் ............ 3-ம் பக்கம்

0 நாடும் நடப்பும் ............ 3-ம் பக்கம்

0 வெளிநாட்டுச் செய்திகள் ............ 4-ம் பக்கம்

## வரி விளம்பரம்

### தேவை

சகல மோட்டார் வாகனங்களும் ஓட்டுவதில் சுமார் பத்து வருட அனுபவம் உள்ள டிரைவர், யாழ்ப்பாணத்தில் உள்ள பிரபல ஸ்தாபனம் ஒன்றிற்கு உடன் தேவை. மெக்கனிஸம் ஓரளவு தெரிந்திருப்பதுடன் கண்ணியம், நேர்மையுடையவராய் இருத்தல் அவசியம். நற்சாட்சிப் பத்திரங்களுடன் விண்ணப்பிக்கவும் விளம்பர இல. 8051, C/o ஈழநாடு லிமிட், யாழ்ப்பாணம். 8051

இறைச்சிக்குரிய கோழிகள் விற்பனைக்கு உண்டு. தொடர்பு கொள்ளவும் அண்ணா விவசாயப் பண்ணை, ஸ்ரேசனடி இணுவில். 8076

### விற்பனைக்கு

நல்லூர் கந்தசுவாமிகோவிலுக்கு அருகாமையில் முத்திரைச் சந்தையடி பருத்தித்துறைவீதியில் வீடுகட்ட அல்லது தொழிற்சாலை அமைக்கக்கூடிய ஒன்றரைப்பரப்புக்காணி கற்கட்டுக் கிணற்றுடன் உடனடி விற்பனைக்குண்டு. விபரங்கட்கு, கு. சோமசுந்தரம், 286, நாவலர் வீதி, யாழ்ப்பாணம். அல்லது க. இராமநாதன், 11, நாயன்மார்வீதி, நல்லூர். 8047

கண்டி ரோட், பூநகரி முகப்பில் மின்சாரம், நன்னீர், புகையிரதநிலையம், பஸ்போக்குவரத்துப் பாதை, ஆஸ்பத்திரி, மார்க்கட் வசதியும், தென்னை மாமரங்கள் உள்ள காணி 40 பரப்பு விற்பனைக்குண்டு. வீடு கட்டுவதற்கும் உகந்தது. 2 அல்லது 4 பரப்புக்களாகவும் எடுக்கலாம். விரும்புவோர் விண்ணப்பிக்கவும்: விண்ணப்பதாரர், தபாற் பெட்டி இல: 82, யாழ்ப்பாணம். 8071

### பயிற்சி

மூன்று மாதகால பொது விவசாய பயிற்சி இளைஞர்கட்கும், யுவதிகட்கும், 1-2-78 ஆரம்பமாகும் ஊதியம் வேதன அடிப்படையில், ஜனவரி இறுதி வாரத்தில் நேரடியாக விண்ணப்பிக்கவும். அதிபர், யாழ்ப்பாணக்கல்லூரி விவசாய நிறுவனம், மருதனார்மடம் 8061

### வகுப்புகள்

காலை வகுப்புகள் தை மாதம் 5ஆந் தேதியும், மாலை வகுப்புக்கள் 7ஆந் தேதியும் ஆரம்பமாகும். G. C. E. [O. L.; A. L.] விஞ்ஞானம், கலை, வர்த்தக வகுப்புகளும், I. C. M. A., A. C. C. A., Ceylon Chamber of Commerce, London Chamber of Commerce, Ceylon Chartered Accountancy வகுப்புக்களும், சுருக்கெழுத்து, தட்டச்சு, ஆங்கிலம், ஜேர்மன், பிரெஞ்சு, சிங்கள வகுப்புக்களும் நடைபெறுகின்றன. (Jaffna Education Centre) யாழ்ப்பாணக் கல்வி நிலையம், 22, இராமையாச் செட்டியார் ஒழுங்கை, யாழ்ப்பாணம். சாந்தி படமாளிகைக்கு முன்னால், யாழ்ப்பாணம் பேரூந்து நிலையத்திலிருந்து (Bus stand) 100 யார் தூரத்தில் உள்ளது. 8072

வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


## பொருளாதார இயக்கம் புத்துயிர் பெறும்

(யாழ்ப்பாணம்)

தமிழர் பொருளாதார இயக்கம் இம்மாதம் 14ந் திகதியான பொங்கல் தினத்தன்று புத்துயிர் பெறவிருக்கிறது.

கடந்த காலங்களில் இதன் அமைப்பாளர்கள் வெளிநாடுகள் சென்றிருந்ததால் சில காலம் இயங்காமலிருந்த பொருளாதார இயக்கத்தை இயக்கும் வேலையில் அமைப்பாளர் சட்டத்தரணி ஏ. குமரகுரு ஈடுபட்டுள்ளார்.

(கெ-அ)

## கத்திவெட்டுக் கொலை

(அம்பலாந்தோட்டை)

அமரதாஸ எனபவர் கத்தியால் வெட்டிக்கொல்லப்பட்டார்.

முன் விரோதம் காரணமாக நிகழ்ந்ததாகக் கூறப்படும் இச்சம்பவம் தொடர்பாக மூவர் தேடப்படுகின்றனர். [உ

“பெப்ரவரி 4-ம் திகதி வரை

# தமிழ் இளைஞர் பேரவை பொறுத்திருக்கவேண்டும்”

## மாவை சேனாதிராஜா கூறுகிறார்

(யாழ்ப்பாணம்)

“மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட தலைவர்கள் வழிதவறி தமது இலட்சியத்துக்கு மாறாக நடக்கமாட்டார்கள். அப்படி நடப்பார்களானால் தமிழ் இளைஞர்கள் அவர்களை சும்மா விடமாட்டார்கள். ஆனால் எமது நடவடிக்கைகளை நாட்டில் இடம்பெற்ற இனக்கலவரங்கள், தடை செய்தன. ஆனால் பெப்ரவரி 4ந் திகதிவரை நாம்பொறுத்துத்தான் ஆகவேண்டும்.’

தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் திரு. மாவை சேனாதிராஜா, தமிழர்விடுதலைக் கூட்டணிக் காரியாலயத்தில்நடைபெற்ற கருத்தரங்கில் மேற்கண்டவாறு கூறினார்.

திரு. மாவை சேனாதிராஜா மேலும் கூறியதாவது:

“இன்றுநாம் இருக்கும் நிலையில் அரசியல் சுதந்திரம் பெற்று பொருளாதார சுதந்திரத்திற்காக மீண்டும் புரட்சிசெய்ய முடியாது. நாம் அரசியல் பொருளாதார சமூக சுதந்திரங்களை ஒரே தடவையில் பெறுவதற்கான போராட்டக்களத்தை அமைக்கவேண்டும்.

“தமிழினம் விடுதலையடைய வேண்டுமானால் தலைமையில் நம்பிக்கை வைக்கவேண்டும். ஒருதலைமையை ஏற்றுவிட்டால் அதன் அடிப்படை இலட்சியங்களைப் பெறுவதற்கு தலைமையுடன் உழைக்கவேண்டும். இன்று இளைஞர் அமைப்பு கட்டுப்பாட்டுக்குள் இயங்கவில்லை.

வர்த்தக அமைச்சரின் விஜயத்தின்போது, தாமுமோர் இயக்கமென தலைவர்களுடன் ஆலோசனை நடாத்தாமல் செயல்பட்டுள்ளது இந்நிலையில் போராட்டத்தில் தாம் தாம் நினைத்தபடி செயல்பட முடியாது. கட்டுப்பாடுள்ள தலைவனின்கீழ்தான்- ஒருயுத்த முனைப் போராட்டத்தில்தான் தமிழ்ஈழத்தை அமைக்க முடியும்.

இதற்காக ஒவ்வொரு தொகுதியிலும், இளைஞர் அமைப்பு உருவாக்கப்பட்டு, சொல்லளவிலும்பார்க்க, செயலளவில் கூடிய போராட்டவீரர்களை தயார்நிலைக்குக் கொண்டுவரவேண்டும். இதற்காக எமது இளைஞர் அமைப்பு அடுத்த வாரம் செயல்படும்.

கருத்தரங்குக்கு தலைமை வகித்து உரையாற்றிய தமிழர் விடுதலைக்கூட்டணிப் பிரமுகரான சட்டத்தரணி குமரகுரு பேசுகையில், இலங்கையில் இனக்கலவரம் நடைபெற்றபோது, லண்டனில் நானும் எமது இயக்க இளைஞர்களும் பல நடவடிக்கைகள் எடுத்தோம். ஆனால் இலங்கையில் நடைபெற்ற வன்செயல்கள் அனைத்தும் உலகநாடுகளின் கண்களுக்கு இரட்டிப்பாக்கப்படுகிறது. ஐ நாவில்கூட குரலெழுப்புமறு சம்பந்தப்பட்ட, ஜெனிவா மனித உரிமைகள் ஸ்தாபனப் பிரதிநிதிகளுடன் பேசினோம். அவர்கள் இப்படி உங்கள் நாட்டில் உள்நாட்டுப் பிரச்னை இருக்குமானால், தொடர்ந்து எம்முடன் தொடர்புகொள்ளுங்கள், காலப்போக்கிலாவது உதவுகிறோம் என்றார்கள்.

இந்நிலையில் உலகநாடுகளின் கவனத்தை எம்பக்கம் திருப்பாமல், பலம்வாய்ந்த அரசுடன் மோதுவதற்கு தயாராகக் கூடாது. யுத்த முனையில் தான் தமிழ் ஈழம் மலரவேண்டும். அதற்கு எம்மைத் தயார் பண்ணவேண்டும்.

கூட்டணி ஸ்தாபகர் திரு. ஞானமூர்த்தியும் பேசினார்.

[செ]


## காங்கேசன்துறை சிமெந்து வேலைத்தலம், காங்கேசன்துறை.

## 1978-ம் ஆண்டுக்கான உள்ளூர் வழங்குநர்களைப் பதிவு செய்தல்

கீழ்க்கண்ட பொருட்களையும், சேவைகளையும் வழங்குவதற்கு காங்கேசன்துறை சிமெந்து வேலைத்தலத்தில் தங்களைப் பதிவு செய்துகொள்ள விரும்பும் வழங்குநர்களிடமிருந்து 1978-ம் ஆண்டுக்கான விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

1. கடதாசி வகைகள்.
2. அலுவலக உபகரணங்கள்
3. தளபாடங்கள்
4. மின்சாரப் பொருட்கள், துணைக்கருவி வகை, தீந்தைள், வாணிஷ் உட்பட
5. பொதுவான இரும்புச்சாமான்கள்
6. வீட்டு இணைப்புகள் மற்றும் சுகாதார இணைப்புகள்
7. பொறியியல் பொருள்கள், சிறிய பெரிய கருவிகள்
8. கயிறுகள், தும்பு, தும்புக்கட்டைகள், சாக்குத் துடைப்பங்கள், நார்க் கடகங்கள்
9. மோட்டார் உதிரிப்பாகக்கள்
10. மரங்கள்
11. கோப்பைச்சாமான்கள், கண்ணாடிச்சாமான்கள்
12. ஆற்றுமணல், குருமணல், சல்லி

### சேவைகள்

1. அச்சுப்பதித்தல்
2. தையல் வேலைகள்
3. தட்டச்சு இயந்திரகள், ரோனியோ யந்திரங்கள், கணக்கிடும் இயந்திரங்கள் ஆகியவற்றின் திருத்தும வேலைகள்
4. லொறிப் போக்குவரத்துச்சேவை, காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு, காங்கேசன்துறையிலிருந்து புத்தளம்
5. எரிபொருள் கருவிகளின் திருத்த வேலைகள்

தம்மைப் பதிவு செய்துகொள்ள விரும்பும் விநியோகஸ்தர்களும் சேவையாளர்களும், எந்தெந்தப் பொருட்களைத் தாம் விநியோகிக்க முடியும் என்பதை விண்ணப்பப்பத்திரங்களில் தெளிவாகத் தெரிவிக்க வேண்டும். ஒன்றுக்கு மேற்பட்ட அம்சங்களுக்குப் பதிவு செய்துகொள்ள விரும்புபவர்கள் தனித்தனியான விண்ணப்பங்களை அனுப்பிவைக்கவேண்டும்.

வழக்கமாக பதிவு செய்யப்பட்ட விநியோகஸ்தர்களிடமிருந்தே இவற்றுக்குத் தொடர்பு கொள்ளப்படும் ஆனால் மற்ற விநியோகஸ்தர்களிடமிருந்தும் கோரும் உரிமையை ஸ்தாபனம் கொண்டுள்ளது.

குறிப்பிட்ட தவணைப்படி விநியோகிக்காத சேவைகளைச் செய்யாத விநியோகஸ்தர்களும், சேவையாளர்களும் பட்டியலிலிருந்து விலக்கப்படுவார்கள்.

பதிவு செய்யப்பட்ட கடிதத்தில் “வழங்குநர்களைப் பதிவு செய்தல் 1978” எனத் தெளிவாகக் கடித உறையின் இடது மேல் மூலையில் குறிப்பிடப்பட்ட கீழ்க்காணும் விலாசத்துக்கு 1978 ஜனவரி 16-ந் திகதிக்கு முன்னதாக பதிவுத்தபாலில் விண்ணப்பங்கள் அனுப்பப்படவேண்டும்.

தயவு செய்து கவனியுங்கள்!

யாழ்ப்பாண மாவட்டத்திற்குட்பட்ட ஸ்தாபனங்களே இதற்கு விண்ணப்பிக்கலாம்.

காங்கேசன் சிமெந்து வேலைத்தலம்,
காங்கேசன்துறை.

28-12-77.

வேலைத்தள முகாமையாளர்
8079


## “பொருளாதார சமூக விடுதலையும் அவசியம்”

—அமிர்

(யாழ்ப்பாணம்)

“தமிழ்மக்கள் பகிஷ்காரம் கறுப்புக்கொடியென வாய்வீரம் பேசி இயக்கத்தைப் போராட்டப்பாதையில் செலுத்தமுடியாது. ஒருதேசிய இனம் அரசியல் விடுதலை பெறுவதிலும் பார்க்க, ஒரே சமயத்தில் பொருளாதார சமூக விடுதலையையும் ஒருங்கிணைந்து பெறவேண்டும். நாம் எடுத்ததற்கெல்லாம், திடீர்முடிவுகளை எடுத்து அரசியல் குஷ்டரோகிகளாக மாறாமல் சந்தர்ப்பம் வரும்போது சுதந்திரப்பாதைக்கு எம்மைத் தயார் படுத்துவோம்.”

தமிழர் விடுதலைக் கூட்டணி தலைமைக்காரியாலயத்தில் நடந்த கருத்தரங்கில் திரு. அ. அமிர்தலிங்கம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர்மேலும் கூறியதாவது:

இன்று நாம் ஆளப்படுகின்ற இனமாக இருக்கின்ற காரணத்தினால் இனக்கலவரங்களின் போது பலமுறை அமைச்சர்களைக் காணுங்கள்; எங்களைக் காப்பாற்றுங்கள்; என்று தமிழ் மக்கள் சதாதொல்லை கொடுத்தார்கள், இன்று எமது தமிழ் மக்களே அமைச்சர்களைப் பகிஷ்கரியுங்கள் என்கிறார்கள். நாம் பொருளாதார வளங்களைப்பெற்று நாம் ஒரு சுதந்திரப்போராட்டத்துக்கு எம்மைத் தயார்படுத்தும்வரை அமைச்சர்களைச் சந்தித்துத்தான் ஆகவேண்டும். இதற்கு நாம் பலகாலம் அவகாசம் கேட்கவில்லை; சந்தர்ப்பம் வரும்வரை பொறுத்திருப்போம்.

### அரசியல் தெரியாது

“தோழர் சண்முகதாசனுக்கு பாராளுமன்ற நடைமுறைகளைத் தெரியாது. பாராளுமன்ற அமைப்பு முறைகளைத் தெரிந்தால் தமிழர் விடுதலைக்கூட்டணி வரவுசெலவுத் திட்டத்தை எதிர்ப்பின்றி நிறைவேற்ற வாய்ப்பளித்ததாக ஏழைமக்களின் மத்தியில் பேசியிருக்கமாட்டார்.

“பாராளுமன்றத்தில் வரவு-செலவுத்திட்டம் வாக்களிப்புக்கு விடப்படும்போது ஆம்; இல்லையென சபாநாயகர், பிரதிநிதிகளைச் சொல்லச் சொல்லும்போது எதிர்கட்சியாகிய நாம், ஆட்சேபனையைக் கிளப்பி பிரிவெனவாதிட்டால் ஒழிய, ஆம் இல்லையென்ற செயலுடன் வரவு-செலவுத் திட்டம் நிறைவேறும். அதுவும், தமிழர் விடுதலைக்கூட்டணியாகிய நாம் சபாநாயகரைப்பார்த்து, பிரிவென சொல்லி, 20 தேசிய பிரதிநிதிகளின் எதிர்ப்புடன் நிறைவேறவேண்டுமென எவரும் எதிர்பார்க்கின்றாரா? இதைவிட பொத்துவில் தொகுதி உறுப்பினர் திரு. எஸ். கனகரத்தினமும் அரசுக்கு விசுவாசமாகிவிட்டாரென நாம் சந்தர்ப்பம் அளிக்கவேண்டுமா? இது அரசியல் சதுரங்கமேயொழிய, வேறொதுவுமில்லை.”

[செ]

ஈழநாடு
The Eelanaadu

## பனஞ்சாராய உற்பத்தி

பனஞ்சாராய உற்பத்தித் தொழிலை அபிவிருத்தி செய்வதற்கு நிதி அமைச்சர் திரு. ரொனி டி மெல் பல துரித நடவடிக்கைகளை மேற்கொள்ளவிருப்பதாக ஒரு செய்தி கூறுகிறது.

இப்போதுதான் முதல் தடவையாக யாழ்ப்பாணத்திலுள்ள கைதடியில் அமைக்கப்பட்ட பனஞ்சாராய வடிசாலையில் உற்பத்தி செய்யப்பட்ட பனஞ்சாராயம் விற்பனைக்கு வந்துள்ளது.

பனஞ்சாராயத்தின் தரம் மிகச் சிறந்ததாக இருப்பதால் விற்பனைக்கு விடப்பட்ட பதினையாயிரம் போத்தலும் துரிதமாக விற்பனையாகிவிட்டதாகவும், விநியோகஸ்தர்களின் வேண்டுகோளை நிறைவேற்றுவதற்குச் சாராய வடிசாலையில் பனஞ் சாராயம் கையிருப்பில் இல்லையென்றும் தெரிவிக்கப்படுகிறது.

பனஞ் சாராயத்துக்கு உள்நாட்டிலும், வெளிநாடுகளிலும் பெரும் கிராக்கி ஏற்பட்டிருக்கிறது. ஆனல் இப்போது உற்பத்தி செய்யப்படும் பனஞ்சாராயம் உள்ளூர்த் தேவைகளுக்கே போதவில்லையாம்.

மதுவைப் படிப்படியாக ஒழிப்பதே அரசின் நோக்கம் ஆனலும் மதுபானம் பாவிப்பவர்களின் தேவையை நிறைவேற்றுவதற்கு உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் சாராயம் போதவில்லை. இதனல் ஆண்டு தோறும் ஒரு கோடி ரூபாய் பெறுமதியான சாராய ஸ்பிரிட் இறக்குமதி செய்யவேண்டியுள்ளது.

பனஞ் சாராயம் பெருமளவில் உற்பத்திசெய்வதற்கான வாய்ப்புக்கள் நிறைய இருக்கின்றன. வடபகுதியில் மட்டும் லட்சக்கணக்கான பனைகள் இன்னமும் பயன்படுத்தப்படாமல் இருக்கின்றன.

முன்னைய அரசின் காலத்தில் சீனித் தட்டுப்பாடு ஏற்பட்டதும் பனங்கட்டி உற்பத்திக்கு ஊக்கமளிக்கப்பட்டது. இதனல் பலருக்கு வேலைவாய்ப்புக் கிடைத்ததுடன் அந்நியச் செலாவணியும் மீதமானது.

இப்போது சீனிவிலை குறைந்து தட்டுப்பாடில்லாமலும் கிடைப்பதால் உற்பத்திசெய்யப்படும் பனங்கள், சாராய உற்பத்திக்குப் பயன்படுத்தப்படலாம். இது தவிரப் பயன்படுத்தப்படாமலிருக்கும் பனைகளிலிருந்தும் பனங்கள் இறக்குவதற்கு முயற்சிசெய்யப்பட்டால் உள்ளூர்த் தேவையை மட்டுமலலாமல் வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்வதன் மூலம் அந்நியச் செலாவணியையும் சம்பாதிக்கமுடியும். பனஞ்சாராய உற்பத்தி அதிகரித்தால் இப்போது இறக்குமதிசெய்யப்படும் சாராய ஸ்பிரிட் தேவைப்படாது; இதனல் ஆண்டு தோறும் ஒரு கோடி ரூபாய் மீதமாகும்.

பனைகள் நிறைய இருந்தாலும், கள்ளிறக்கும் தொழிலாளர் தொகை போதாது.

சீவல் தொழிலில் ஈடுபடுபவர்களுக்குக் காப்புறுதி மற்றும் விபத்துக்கால உதவி முதலிய திட்டங்கள் கொண்டு வரப்பட்டால் மேலும் பலர் இத்தொழிலில் ஈடுபட முன்வரலாம்.

பனையிலிருந்து பெறக் கூடிய பிரயோசனம் பற்றி ஆண்டுக்கணக்காக எடுத்துக்கூறியும் அதில் எந்த அரசும் சிரத்தை எடுக்கவில்லை.

இப்போது, பனஞ்சாராயம், பனையின் மகத்துவத்தைப் பலரும் அறிந்து கொள்வதற்கு நல்ல வாய்ப்பளித்திருக்கிறது.

இதற்காக முன்னைய அரசுக்கு நன்றி சொல்லவேண்டும்.

பனஞ் சாராயத்தை ஓர் உதாரணமாகக் கொண்டு பனம் பொருள் உற்பத்தி பற்றி ஆராய்வதற்கும், அவற்றை விஞ்ஞான ரீதியில் சுலபமாகப் பெறுவதற்கும் ஆராய்ச்சிசெய்வதற்கு ஒரு சபையை இந்த அரசு நிறுவுவதற்கு முன்வருமென்று எதிர்பார்ப்போம்.

தேசிய லொத்தர் சபை

## முதல் பரிசாக ட்ராக்டர் வழங்கும்

(கொழும்பு)

தேசிய லொத்தர் சபை இனிமேல் தனது முதல் பரிசாக உழவு இயந்திரத்தையும் இழுவைப பெட்டியையும வழங்கவிருக்கிறது.

தேசிய அபிவிருத்தியை ஊக்குவிக்கும் வகையில் இந் நடவடிக்கை இம்மாதத்தில் இருந்து செயற்படுத்தப் படவிருக்கிறது. தேசியலொத்தர் சபையும் உழவு இயந்திரக் கூட்டுத்தாபனமும் கூட்டாக இத்திட்டத்தை வகுத்துள்ளன.

மொனருகலையில் இம்மாதம் 24-ம் திகதி நடைபெறும் சீட்டிழுப்பின் போது முதல் தடவையாக முதல் பரிசாக உழவு இயந்திரமும் இழுவைப் பெட்டியும் வழங்கப்படவுள்ளன.

31-ம் திகதி கம்புள்ளையில் நடைபெறும் மகாஜனசம்பத சீட்டிழுப்பில் முதல் மூன்று பரிசுகளாக இவையேவழங்கப்படும்.

ஒரு உழவுயந்திரம் இழுவைப் பெட்டியின் பெறுமதி 65,000 ரூபாவாகும். (உ)

## றியோவுக்கு மீண்டும் அனுமதி

(யாழ்ப்பாணம்)

யாழ் நகர மண்டபத்தைப் பாவிப்பதற்கு றியோ சினிமா ஸ்தாபனத்துக்கு மீண்டும் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ஈ)



இலங்கையைச் சேர்ந்த குமாரி சசிகலா தர்மலிங்கத்தின் பரதநாட்டிய அரங்கேற்றம் சென்னை மியூசிக்கல் அக்கடமி மண்டபத்தில் கடந்த வாரம் வெகுசிறப்பாக தமிழ்நாடு ராஜ்யசபை உபதலைவர் சிலம்புச்செல்வர் ம. பொ. சிவஞானம் தலைமையில் பத்மஸ்ரீ ஜெமினிகணேசன், கலைமணி சிவகுமார் முன்னிலையில் நடைபெற்றது. பிரபல கலைஞர்களும் சமூகத் தலைவர்களும் கலந்து விழாவைச் சிறப்பித்ததுடன் பாராட்டுரையும் வழங்கினர்.

# ஜனதிபதி, உபஜனதிபதி
## தெரிவு எப்படி அமையவேண்டும்?
## முற்போக்குத் தமிழர் அமைப்பு கருத்து

[யாழ்ப்பாணம்]

''இந்த நாட்டின் ஜனதிபதி சிங்களம் பேசும் மக்களைச் சேர்ந்தவராக இருந்தால் உப ஜனதிபதி தமிழ் பேசும் மக்களைச் சேர்ந்தவராக இருக்க வேண்டும். ஜனதிபதி தமிழ் பேசும் ஒருவராக இருந்தால் உபஜனதிபதி சிங்களம் பேசும் மக்களில் ஒருவராக இருக்கவேண்டும்.''

இவ்வாறு கூறும் யோசனையை அரசியல் அமைப்புத் திருத்தத் தெரிவுக்குழுவுக்கு 'முற்போக்குத் தமிழர் அமைப்பு' அனுப்பிவைத்துள்ளது. சேர் வைத்திலிங்கம் துரைசாமி வீதியிலுள்ள திரு யோகேந்திரா துரைசுவாமியின் இல்லத்தில் இம்முற்போக்குத் தமிழர் அமைப்புக் கூடி அரசியல் அமைப்புத் திருத்தத் தெரிவுக் குழுவுக்கு அனுப்புவதற்கான யோசனைகளைத் தீர்மானித்தது. இம்முற்போக்கு அமைப்பு அனுப்பி வைத்த மற்றும் கருத்துக்கள் வருமாறு:

தமிழர் பாரம்பரியமான தமிழ்ப் பகுதிகளில் தமிழே நிர்வாக மொழியாகவும், நீதிமன்ற மொழியாகவும் இருத்தல்.

''ஐக்கிய நாடுகள் மனித உரிமை சாசனத்தை நடைமுறைப்படுத்தல்.

''ஆட்சிமன்ற அங்கத்தவராகத் தெரிவு செய்யப்படும் ஒருவர் வர்த்தகராகவோ அல்லது சட்டத்தரணியாகவோ வேறு தொழில் செய்யமுடியாது.'' [அ]

இனஒற்றுமை வலுப்பெற

## தமிழ்ப்பிள்ளைகள் சிங்களமும் சிங்களப் பிள்ளைகள் தமிழும் கற்க வசதி
### கல்வி மந்திரி நடவடிக்கை

[கொழும்பு]

இனஒற்றுமையை ஏற்படுத்தும் வகையில் கல்வித்திட்டங்களை அமுல் செய்ய அரசாங்கம் முயற்சி எடுக்கவிருக்கிறது.

இந்தவகையில் கல்வி அமைச்சர் திரு. நிஸங்க விஜயரத்ன தமிழ்ப்பிள்ளைகள் சிங்களத்தையும் சிங்களப் பிள்ளைகள் தமிழையும் படிக்க ஒழுங்கு செய்யவிருக்கிறர்.

பெற்றேர் விருப்பப்படி வேற்றுமொழிகளான பாளி, பிரெஞ்சு, சீன, ரஷ்ய, ஹிந்தி மொழிகளையும் கற்க அமைச்சர் ஒழுங்கு செய்யவிருக்கிறர். (உ)

## உபதபால் அதிபராக நியமனம்

(துணுக்காய்)

துணுக்காய உபதபால் நிலையத்து நிரந்தர உபதபால் அதிபராக முன்னுள் உபதபால் அதிபர் திரு. க. சந்திரசேகரம் மீண்டும் நியமிக்கப்பட்டுள்ளார்.

பிரபல சமூகசேவையாளரான இவர் யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் பழைய மாணவராவார். இங்கு இவர் 'சந்திரசேகரம் வாசகர் வட்டம்' எனும் நூல் நிலையத்தை யும் சிறப்பாக நடாத்தி வருகின்றார்.

மணிவாக்கு

''ஆயுதப் போட்டி சமாதானத்துக்குப் பகை; ஏழை நாடுகளின் பொருளாதார வளர்ச்சியை அழித்துவிடும்.''

—ஜிம்மி கார்ட்டர்.

## நாடும் நடப்பும்

எல்லோருக்கும் எனது உளம் நிறைந்த புத்தாண்டு வாழ்த்துக்கள்!

0 0 0

சுமார் ஒரு வாரத்துக்குமுன் மாத்தறை நோக்கிச் சென்றுகொண்டிருந்த கடுகதி பஸ் ஒன்று நிறகவேண்டிய அவசியமில்லாத இடத்தில் நிறுத்தப்பட்டு ஒரு பெண்ணை ஏற்றிச் சென்றதாம்.

அந்தப் பெண் நிறைமாதக் கர்ப்பிணி. பிரசவத்திற்காக அம்பலாங்கொடை ஆஸ்பத்திரிக்கு ஒரு மோட்டார் காரில் சென்றுகொண்டிருக்கையில் மோட்டார்கார் பழுதடைந்துவிட்டது. பெண்ணுக்கோ பிரசவவேதனை தாங்கமுடியவில்லை. பஸ்ஸைக் கண்டதும் அப்பெண்ணின் உறவினர்கள் நிறுத்துபடி சைகைகாட்டினர். நிலைமையை உணர்ந்துகொண்ட சாரதியும் பஸ்ஸை நிறுத்தி பெண்ணையும் மற்றவர்களையும் ஏற்றிக்கொண்டு அம்பலாங்கொடை நோக்கிச் சென்றுகொண்டிருந்தது.

இடையில் கடைசி ஆசனத்திலிருந்தவர்களை முன்னே வரச் சொன்னர் கண்டக்டர். பஸ் நிறுத்தப்பட்டது பின் ஆசனத்தை மறைத்துத் திரை ஒன்று போடப்பட்டது. பஸ்ஸிலிருந்து பெண்கள் சிலர் உதவிக்கு அழைக்கப்பட்டனர்.

சிறிது நேரத்தில் 'குவா குவா' சத்தம் கேட்டது.

பிரயாணிகள் முகத்தில் மகிழ்ச்சி. பின்னர் பஸ் புறப்பட்டு அம்பலாங்கொடை ஆஸ்பத்திரியில் தாயையும் சேயையும் ஒப்படைத்துவிட்டு தனது மாத்தறைப் பிரயாணத்தை ஆரம்பித்தது.

இந்தச் செய்தியை ஒரு பத்திரிகையில் வாசித்துக்கொண்டிருந்த எனது நண்பர் ஒருவர் ''அந்தப் பக்கத்து றோட்டில் நிறைமாதக் கர்ப்பிணியே பஸ்ஸில் சுகமாகப் பிரசவிக்கக் கூடியதாயிருந்தது; யாழ்ப்பாணத்து வீதிகளில் பஸ்ஸிலோ, வேறு வாகனங்களிலோ குறைமாதக் கர்ப்பிணிகள் சென்றலும் வழியில் பிரசவம் நடந்து சுகமே போய்ச் சேரமாட்டார்கள்'' என்றர்.

இதைக் கேட்டுக்கொண்டிருந்த மற்றொரு நண்பர், தாவடிச் சந்தியிலிருந்து சுடலைக்கு ஒரு றோட்டுப்போகுது; அந்த றோட்டில் வாகனங்களில் செல்பவர்கள் வீடுபோய்ச்சேரமாட்டார்கள், சுடலைக்குத்தான் போய்ச்சேரவேண்டி ஏற்படும் என்றர்.

யாழ்ப்பாணத்து வீதிகளுக்கு எப்போதுதான் விமோசனம் கிடைக்குமோ!

0 0 0

பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபா பங்களூரிலுள்ள தமது இல்லமான பிருந்தாவனத்தில் சமீபத்தில் ஒரு திருமணம் நடத்திவைத்தார். பாபாவே தமது திருக்கரத்தால் வரவழைத்துக் கொடுத்த மாங்கல்யத்தை மணமகன் டாக்டர் யோகேந்திரா, மணமகள் செல்வி ரவீந்திராதேவியின் கழுத்தில் பாபா ஆசிகூற அணிந்தார். மட்டக்களப்பு முதலாவது எம். பி. திரு. செ. இராசதுரையின் மகள்தான் செல்வி ரவீந்திராதேவி.

இந்த மணமக்களுக்கு சென்ற புதன்கிழமை பிற்பகல் மட்டக்களப்பு நகரமண்டபத்தில் சிறப்பான வரவேற்பளிக்கப்பெற்றது. பெருந்திரளானேர் இந்த வரவேற்பில் கலந்துகொண்டனர்.

வடபகுதி எம். பிக்கள் எவரும் இதில் கலந்துகொள்ளவில்லையாம். இது பெரும் குறையாகப் பேசிக்கொள்ளப்படுகிறது!

அன்று மட்டக்களப்புத் தபால் நிலையத்துக்கு வந்து சேர்ந்த வாழ்த்துத் தந்திகள் அந்தத் தபால் நிலையத்தின் சரித்திரத்தில் இதுவரை கண்டறியாததாம்! வாழ்க மணமக்கள்!

[4ம் கலம் பார்க்க]

[5ம் கலத் தொடர்ச்சி]



# ஆட்சியின் வலிமை அறத்திலே அரணில் அல்ல!

## எம். ஜி. ஆர். ஆட்சியின் மாட்சி என்கிறார் அமைச்சர்

சென்னை, ஜன. 1

"கூச்சப்பட்டு ஒதுங்கியே நிற்கும் சுபாவம்பெற்ற புரட்சித் தலைவர் திரு. எம். ஜி. ஆருக்கு தமிழகம் செல்வமாகக் கடிந்துகொண்டு - கடுமையாகக் கட்டளையிட்டு வற்புறுத்தி வழங்கிய பொறுப்புத்தான் தமிழக முதல்வர் பொறுப்பு."

இவ்வாறு தமிழ்நாடு உள்ளாட்சித்துறை அமைச்சர் திரு. கா. காளிமுத்து கூறினார்.

சென்னையில் நடைபெற்ற வைபவமொன்றில் அவர் பேசுகையில் மேலும் கூறியதாவது:

### ஆட்சியின் வலிமை

ஓர் ஆட்சியின் வலிமை அது எத்தகைய 'அரண்'களைப்பெற்றிருக்கிறது என்பதைப் பொறுத்ததன்று. அது எத்தகைய அறத்தோடு விளங்குகிறது என்பதைப் பொறுத்தே அமையும். அதிகாரம்-என்பது பேய்களுக்குப் போதையூட்டும். அபின். அந்தப் போதை மயக்கில் தகாதன செய்து 'கள்' குடித்த குரங்காக ஆட்டம் போடும்போதுதான் -ஏழைகள் அழுத கண்ணீர் கூர்வாளாகி அவர்களைச் சாய்க்கிறது. அறம் கூற்றாகி அவர்களை வீழ்த்துகிறது.

'வஞ்சகம்-சூழ்ச்சி - ஆதிக்க உணர்ச்சி' இவைகளைக்காட்டிலும், நீதி - நியாயம்- அன்பு- அரவணைக்கும் தன்மை' இவைகளைக்கொண்டவர்கள்தான் அரசியல் உலகிலும் பொன்றாப் புகழோடு விளங்கிவந்திருக்கிறார்கள். 'சகுனிக்குணம்- சாணக்கியத் தன்மை - குடில உணர்வு மாக்கியவல்லி- மனப்பான்மை' இவைகள் அரசியல்வாதியின் தவிர்க்கமுடியாத தன்மைகளாக இருந்திட வேண்டும் எனும் உள்ளார்ந்த எண்ணம் கொண்டவர்தான் கலைஞர் கருணாநிதி. இக்கத் தன்மைகள் எதுவுமின்றி-சத்தியம் ஒன்றையே தத்துவமாகக்கொண்டு- தன் தனிவாழ்வு பொதுவாழ்வு இரண்டையும் அமைத்துக்கொண்டவர் புரட்சித் தலைவர்.

### தமிழக முதல்வர் பொறுப்பு

கூச்சப்பட்டு-ஒதுங்கியே நிற்கும் சுபாவம்பெற்ற புரட்சித் தலைவருக்கு-தமிழகம் செல்லமாகக் கடிந்துகொண்டு - கடுமையாகக் கட்டளையிட்டு-வற்புறுத்தி வழங்கிய பொறுப்புத்தான் தமிழக முதல்வர் பொறுப்பு. 'அண்ணா'வின் கொள்கையைக் காக்கும் புனித இயக்கத்தை உருவாக்கி-அதை நடத்திச்செல்லும் கடமையையும் அன்றுகட்சியின் லட்சோப லட்சம் தொண்டர்கள்தான் அவர் தோளில் சுமத்தினார்கள். அரசியல் சதுரங்கம் நடத்தி - மந்திராலோசனை செய்து - சூழ்ச்சிவலை பின்னி- அவரை எப்படிச் சரிக்கட்டுவது இவரை எப்படி ஒழித்துக்கட்டுவது என்று 'சதித்திட்டம் தீட்டிப்' பொறுப்பைக் கைப்பற்றியவரல்லர் புரட்சித் தலைவர். முள் முடி அணிந்து- சிலுவை சுமந்த இயேசுபிரானாக - இந்த முதல்வர் பதவியினை ஏற்று அவர் நடந்துகொண்டிருக்கிறார். ஜனநாயக நாட்டில் ஏதேனும் ஒரு கட்சிதான் ஆட்சிக்கு வரமுடியும். ஆனால் ஆட்சிக்குவந்தபின்- கட்சி மனப்பான்மையின்றி அகன்ற-விரிந்த நோக்கோடு நிர்வாகத்தை நடத்திடவேண்டும் என்பதை அறிஞர் அண்ணா அவர்களுக்குப் பிறகு புரட்சித் தலைவர் அவர்கள் நிலைநாட்டியிருக்கிறார்கள்.-

'பொர்சுச் சீட்டுக்களை' மூலதனமாக வைத்தே - நீண்ட துண்டுக் கருணாநிதிக்கட்சிநண்பர்கள் -ஆட்சியிலிருந்தபோது செய்த ஆபாச வியாபாரத்தை நாடே அறியும். ஆனால் இன்று புரட்சித் தலைவரின் தம்பிமார்கள் பார்த்து வெகுநாளாயிற்றே என்பதற்காகமட்டுமே அமைச்சர்களைப் பார்ப்பது-

பொதுப்பிரச்னைகளுக்காக மட்டுமே அதிகாரிகளை அணுகுவது என்பதோடு தங்களைக் கட்டுப்படுத்திக்கொண்டு கட்சி வளர்ச்சியிலே கவனமாகஇருப்பதையும் நாடு நம்பமுடியாத வியப்போடு கவனிக்கிறது புகழெனின் உயிரும் கொடுக்குவர் பழியெனின் உலகுடன் பெறினும் கொள்ளலர்' என்ற புறநானூற்று வாசகங்களுக்கு நடமாடும் எடுத்துக்காட்டுக்களாகும் வகையில் தனது தொண்டர்களைப் புரட்சித் தலைவர் பயிற்சித்து வைத்திருக்கிறார்.

### உள்ளம் உருகிய முதல்வர்

'நீங்கள் ஆட்சியைப் பயன்படுத்தித் தினையளவும் தவறு செய்திடக்கூடாதுஎன்று நான் சொல்லக்காரணம் அப்படித் தவறுசெய்தால் அதன் காரணமாக ஆட்சி கவிழும்; நமது பதவி பறிபோகும்' என்பதற்காக அல்ல: அப்படித் தவறு செய்தால் நண்பர்களே! அதற்குப்பிறகு அண்ணாவின் கொள்கை நாதியற்றுப் போகும். அண்ணாவின் பேரைச் சொன்ன கருணாநிதி கட்சி கையூட்டுப்பெற்றது. கடைசியில்-இவர்களும் இப்படித்தானா? என்கிற விரக்தி நிலைக்கு மக்கள் வந்தால் அது அண்ணாவின் கொள்கைக்குரிய எதிர்காலத்தையே இருளாக்கிவிடும். அதனால்தான் கேட்டுக்கொள்கிறேன் எந்தக்களங்கமும் உங்களை அணுக இடம் கொடுக்காதீர்கள்' என்று கட்சியின் சட்டமன்ற உறுப்பினர்கள் கூட்டத்தில் புரட்சித்தலைவர் கண்கலங்க-குரல் தழுதழுக்க உள்ளம் உருகிக் குறிப்பிட்டுள்ளார்.

மாணவர்களாயினும் -ஆசிரியர்களாயினும்- தொழிலாளர்களாயினும்-விவசாயப் பெருமக்களாயினும் தாங்களாகவே முன்வந்து அவர்கள் பேசுகிறார்களா? அல்லது அரசியல் பொருமைக்காரர்களுக்குச் சொக்கட்டான் காய்களாகி ஆரவாரம் செய்கின்றனரா என்று கேள்விகளைப்பினும் எதுபற்றியும் கவலைப்படாது. பொறுமையோடு அமர்ந்து அவர்களது 'பிரச்னை'களைப்பேசி என்னளவும் அவர்கள்மீதுள்ள அன்பையோ- மதிப்பையோ குறைத்துக்கொள்ளாத அற்புதமான தலைமை- தமிழகத்தில் இப்போது அமைந்திருக்கிறது என்பதை- அனைத்துந்திய அண்ணா தி. மு. கழகத்திற்குத்தொலைதூரத்தில் இருப்பவர்களே தெரிவிக்கிறார்கள்.

விளம்பரம் இல்லை - வீண் ஆடம்பரம் இல்லை - பகட்டு இல்லை - படாடோபம் இல்லை. ஊழலுக்கோ- ஊதாரித்தனத்துக்கோ இடமே இல்லை எனும் வகையில் புரட்சித் தலைவர் 'இலட்சியஉறுதி' யோடு ஆட்சியை நடத்துகிறார்.

### விளம்பர விரும்பிகள்

தன் உருவத்துக்குப் பின்னால் 'அண்ணா'வை நிற்க வைத்து விளம்பரப்படுத்திக்கொண்ட தன்னல விரும்பிகளைத் தமிழகம் சந்தித்திருக்கிறது. அரசுவிளம்பரங்கள் அனைத்திலும் 'முகம்' காட்டுகிற முதல்வரைக் கண்டிருக்கிறது. 100க்கு மேற்பட்ட அரசு நிறுவனங்களுக்குத் தன் பெயர்சூட்டி அழகு பார்த்தவர்கள் ஆட்சிநடத்தியகோலத்தையும் நாடு அறிந்திருக்கிறது.

இன்று அரசு அலுவலகங்களில்-உள்ளாட்சி அமைப்புக்களில் - எனது படத்தை வைக்க வேண்டிய அவசியமில்லை என்று கட்டளையிடுகிற முதல்வராக புரட்சித்தலைவர் இருக்கிறார். வாத்தின் முதுகிலே ஊற்றப்பட்ட தண்ணீர்போல அதிகாரத்தால் சிறிதளவுகூட மனப்பாதிப்புக்கு ஆளாகாமல்-அற்புதமாக நாட்டை நடத்திவரும் புரட்சித் தலைவரை நல்ல மனங்கள் வாழ்த்துகின்றன.

வலியோர் எளியோரை வதைத்திடும் துன்பத்தொடர்கதை இனி இருக்காது. (உ)

---

## குவைத் அதிபர் காலமானார்

குவைத், ஜன. 1

குவைத் நாட்டின் அதிபர் ஷேக்ஸபா அல் ஸபா (65 வயது) நேற்று அதிகாலை மாரடைப்பால் மரணமானார்.

நேற்று பகல் ஒரு மணிக்கு அதிபரின் பூதவுடல் நல்லடக்கம் செய்யப்பட்டது.

குவைத் அதிபரின் மறைவுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் நாட்டில் 40 நாள் துக்கம் அனுஷ்டிக்கப்படும். அரசாங்க அலுவலகங்கள், பாடசாலைகள் மூன்று தினங்கள் வரை மூடப்பட்டிருக்கும்.

---

## கார்ட்டரின் பாரத விஜயம்; 250 நிருபர்கள் வருகை

புதுடில்லி, ஜன. 1

அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜிம்மி கார்ட்டரின் பாரத விஜயத்திற்கு முன்னதாக 100 அதிகாரிகளும், 50 பத்திரிகை நிருபர்களும் புதுடில்லி வந்தடைந்தனர்.

செஹ்ரானில் இருந்துவரும் திரு. கார்ட்டருடன் மேலும் 200 பத்திரிகை நிருபர்கள் பாரதம்வர ஏற்பாடாகியிருந்தது.

திரு. கார்ட்டரின் பாரத விஜயம் தொடர்பான செய்திகளை உலகு முழுவதும் உடனுக்குடன் அறிவிப்பதற்கு விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

திரு. கார்ட்டர் விஜயம் தொடர்பான நிகழ்ச்சிகள் அமெரிக்க டெலிவிஷனில் இடம் பெறும்.

### பொது விஷயங்கள்பற்றி......

திரு. கார்ட்டர் பாரத விஜயத்தின்போது குறிப்பிட்ட ஒரு விஷயத்தைப்பற்றிமட்டும் பேசாது உலகின் பொதுவான விஷயங்கள்பற்றி பாரதத் தலைவர்களுடன் உரையாடுவார் என தெரிவிக்கப்படுகிறது.

### தெஹ்ரானில்

இதே வேளை தெஹ்ரானில் அவர் அளித்த பேட்டி ஒன்றில் மத்திய கிழக்கு விவகாரத்தில் சமரஸத்தை ஏற்படுத்துவதில் தமக்குள்ள ஆர்வத்தை வெளிப்படுத்தினார். [உ]

......

## முறையீடு செய்வாராம்

[யாழ்ப்பாணம்]

அரசியல் கட்சி ஒன்றுக்குச் சார்பான பத்திரிகை ஒன்றில் பிரசுரிக்கப்பட்ட செய்தி ஒன்று தமக்கு அவமானத்தை ஏற்படுத்துவதாக இருப்பதாகவும் இச்செய்தி குறித்துத் தாம் பத்திரிகைப் பேரவையில் முறையீடு செய்வது குறித்து சட்ட நிபுணர்களுடன் ஆலோசனை நடத்தி வருவதாகவும் காங்கேசன்துறைத் தொகுதி ஐக்கியதேசியக்கட்சி அமைப்பாளர் திரு எஸ். ஜே. என். செராஜா தெரிவித்தார். [உ]

......

## மர்மச் சடலம்

[வாதுவ]

ரயில் பாதை அருகே பெல் பொட்டம் அணிந்த வாலிபர் ஒருவரின் சடலம் கிடக்கக் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

இனந்தெரியாத இவ்வாலிபர் யார் எனப் பொலிசார் விசாரணை புரிகின்றனர். [உ]

---

## ஆஸி-இந்திய கிரிக்கெட் டெஸ்ட்

மெல்போர்ன், ஜன 1

ஆஸ்திரேலியாவுக்கும் இந்தியாவுக்குமிடையே இங்கு நடைபெறும் 3-வது கிரிக்கெட் டெஸ்டின் 2 வது நாளான நேற்று இந்தியா தனது இரண்டாவது இன்னிங்ஸில் ஆட்ட நேர இறுதிவரை 1 விக்கட்டை இழந்து 50 ஓட்டங்கள் எடுத்திருந்தது.

ஆஸ்திரேலியா தனது முதலாவது இன்னிங்ஸில் 213 ஓட்டங்கள் எடுத்திருந்தது. இந்தியா முதல் இன்னிங்ஸில் 256 ஓட்டங்கள் எடுத்தது. இந்திய பந்தெறி வீரர் சந்திரசேகர் 56 ஓட்டங்கள் நஷ்டத்துக்கு 6 விக்கட்டுகளைக் கைப்பற்றியிருந்தார்.

2-ம் தினம் தொடர்ந்து ஆட்டம் நடைபெறும்.

---

## கொள்ளை முயற்சி முறியடிப்பு

(பேலியகொடை)

சிகரட் வான் ஒன்றை வழிமறித்து நடைபெறவிருந்த கொள்ளை முயற்சிச் சம்பவம் ஒன்று பொலிசாருக்குக் கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து முறியடிக்கப்பட்டது.

கைக்குண்டுகளைப் பயன்படுத்தி இக்கொள்ளையை நடத்தத் திட்டமிட்டிருந்ததாகக் கூறப்படும் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

குறிப்பிட்ட வானில் 12 அயிரம் ரூபா பணமும், சிகரெட்டும் இருந்தனவாம். (உ)

---

அரசியல் நெருக்கடியின் எதிரொலி

## கர்நாடக மாநிலத்தில் ஜனாதிபதி ஆட்சி பிரகடனம்

பெங்களூர், ஜன. 1

கர்நாடக மாநிலத்தில் ஜனாதிபதி ஆட்சி பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

கர்நாடக முதலமைச்சர் திரு. தேவாராஜ் அர்ஸ் காங்கிரஸ் கட்சியில் இருந்து தற்காலிகமாக விலக்கப்பட்டிருந்தார்.

காங்கிரஸ் கட்சியுடன் அவருக்கு ஏற்பட்டிருந்த கருத்து மோதலே இந்நடவடிக்கை எடுக்கக்காரணமாயிருந்தது.

### அரசியல் நெருக்கடி

காங்கிரஸ் மீதான இவரது மோதலால் கர்நாடக மாநிலத்தில் அரசியல் நெருக்கடி ஏற்பட்டது.

இதனையடுத்தே ஜனாதிபதி ஆட்சி அங்கு பிரகடனம் செய்யப்பட்டுள்ளது. விரைவில் அங்கு பொதுத்தேர்தல் நடைபெறும்.

இதேவேளை, தாம் திட்டமிட்டபடி தமது மாநாடு குறிப்பிட்ட திகதியில் நடைபெற்றே தீரும் என்று திருமதி காந்தியின் ஆதரவாளர்கள் அறிவித்துள்ளனர். (உ)

Grand New Year Release
RIO (Jaffna) Daily 4-45, 7-00, 9-30 p. m.
SUSPENSE STORY OF THE YEAR
HENNESSY

ராணி [யாழ்ப்பாணம்]
தினசரி 10-30, 2.30 ,6·00, 9.30.
எம். ஜி. ஆர்.-விஜயா, நாகேஷ் நடித்த
விவசாயி
(புதிய பிரதி)

லிவலிவடன் (யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-சுஜாதா-ஜெய்கேணஷ்
மூத்தான முத்தல்லவோ

லிடோ எம். ஜி. ஆர். — லதா நடித்த
தினசரி 10-30, 2-30, 6-30, 9-30
(யாழ்.நகர்) போன்: 7693
நீதிக்கு தலைவணங்கு

மனோஹரா (யாழ் நகர்) தினசரி 4 காட்சிகள்
சிவாஜி- ஜெமினி - லக்ஷ்மி - நிர்மலா
உனக்காக நான்
(ஈஸ்ட்மன் கலர்)

வின்ஸர் யாழ்ப்பாணம்
தினசரி 4 காட்சிகள்
ஃ கமலஹாசன் ஃ ரஜனிகாந்த்
ஃ எம்.எஸ்.விஸ்வநாத் ஸ்ரீதேவி-ஒய். விஜயா
மூன்று முடிச்சு
திரை கதை வசனம், டைரக்ஷன்; கே. பாலசந்தர்

Regal (Jaffna)
தினசரி பி. ப. 2-30, மாலை 6-30,
இரவு 9-45 மணிக்கு மட்டும்
ராஜ்குமார் நடித்த
மரியாதா (ஹிந்தி)
(ஈஸ்ட்மன் கலர்)

சாந்தி (யாழ். நகர்) போன்: 7642.
தினசரி 10-30, 2-30, 6-30, 9-45
எஸ். எஸ் ஆர் - விஜயகுமாரி
கலைஞர் மு. கருணாநிதியின்
பூம்புகார் (புத்தம்புதிய பிரதி)

ஸ்ரீதர் தினசரி 4 காட்சிகள் (யாழ்ப்பாணம்)
முத்துராமன், ஜெயசித்திரா, சுந்தரராஜன், ஸ்ரீகாந்த்
இன்ஸ்பெக்டர் மனைவி
டைரக்ஷன் A. C. திருலோகசந்தர் M. A.

யாழ்.மாவட்டத்தில் ராஜா திரையரங்கில்மட்டும்
எல்லாக்காட்சிகளுக்கும்
தமிழ்த்தலைவர் அமரர் தந்தை செல்வாவின்
இறுதியாத்திரைக்காட்சி காண்பிக்கப்படும்.
எஸ். பி. ஆர். பிலிம்ஸ் வெளியீடு
தினசரி காட்சி நேரங்கள்:
10-15, 2-00, 6-00, 9-45
ஜெமினி - கே. ஆர். விஜயா
சீர்காழி கோவிந்தராஜன் - விஜயகுமாரி
நடித்த
P. V. C. தயாரிப்பு
தசாவதாரம்
(கலர்)
திரைக்கதை, வசனம், டைரக்ஷன்:
கே. எஸ். கோபாலகிருஷ்ணன்

கார் மோசடி முயற்சி வழக்கு:

# எதிரிக்கு கடூழியச் சிறை; சாட்சிக்கு ரூ. 100 அபராதம்

(மாவிட்டபுரம்)

திருத்த வேலைக்காகத் தம்மிடம் தரப்பட்ட காரொன்றை அதன் இலக்கத்தை மாற்றி, விற்று, மோசடி செய்யமுயன்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட நபர் ஒருவரைக் குற்றவாளியாகக் கண்ட மல்லாகம் நீதிபதி அவருக்கு ஒருவருடக் கடூழியச் சிறைத்தண்டனை விதித்தது டன் இவ்வழக்கில் பொய்ச் சாட்சி சொன்னதற்காக சாட்சி ஒருவருக்கு 100 ரூபா அபராதமும் விதித்தார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த எம். எம். மாறூப் என்பவரிடம் கூட்வேலை, சிற்வேலை செய்வதற்காக ஒரு காரை மருதனமடத்தைச் சேர்ந்த ரி சங்கரப்பிள்ளை என்பவர் கொடுத்திருந்த சமயம் அக்காரின் திருத்தவேலையை செய்யாது ஏமாற்றிவந்த மேற்படி நபர் அக்காரின் இலக்கத்தை மாற்றி விற்பனை செய்வதற்காக மாதம்பைக்குக் கொண்டு சென்று விற்கமுயன்றதாக குற்றஞ்சாட்டி சுன்னாகம் பொலிசாரால் இவ்வழக்கு தொடரப்பட்டிருந்தது.

இவ்வழக்கு மல்லாகம் நீதிமன்றத்தில் விசாரணைக்கெடுக்கப்பட்ட சமயம் எதிரி சார்பில் ஆஜரான சட்டத்தரணி திரு. சு. நடராசா இக்கார் எதிரியினது காரேயென்றும், அதனை நிரூபிக்கத் தம்மிடம் பல தஸ்தாவேஜுகள் இருப்பதாகவும் கூறி நீதிபதியிடம் அவற்றைச் சமர்ப்பித்தார்.

வழக்காளி தரப்பில் ஆஜரான சட்டத்தரணி ஆர். ஜே. செல்வரத்தினம் இதை மறுத்துவழக்காளிபுங்குடுதீவில் வாங்கியதற்கு அத்தாட்சிகள் உண்டென்றும் கூறினார்.

இதையடுத்து இக்காருக்கு வர்ணம் தீட்டியவரான சின்னத்தம்பி கந்தசாமி என்பவரும் செல்லையா வல்லிபுரம், சார்ஜண்ட் சட்டநாத பிள்ளை என். ஆர். சின்னராசா ஆகியோரும் சாட்சியமளித்தனர்.

விசாரணை முடிவில் எதிரியைக் குற்றவாளியாகக் கண்ட நீதிபதி திரு. எம். டி. ஜேசுரத்தினம் அவருக்கு ஒரு வருடக் கடூழியச்சிறைத் தண்டனை விதித்ததுடன் வழக்காளி தரப்பினருக்கு 2000 ரூபா நஷ்டஈடு வழங்குமாறும் உத்தரவிட்டார். அத்துடன் இத்தீர்ப்புக் குறித்து அப்பீல் செய்வதானால் 2500 ரூபா உறுதிப்பிணை செலுத்தப்படல் வேண்டுமெனவும் உத்தரவிட்டார்.

மேற்படி வழக்கில் பொய்ச் சாட்சி சொன்னதற்காக ஜா-எல என்னுமிடத்தைச் சேர்ந்த கறுப்பன் செட்டியார் என்பவருக்கு நீதிபதி 100 ரூபா அபராதமும் விதித்தார்.

## விநியோகத்தில் மோசடி?

(தெல்லிப்பளை)

பல நோக்குக்கூட்டுறவுச் சங்கத்தின் கீழ் இயங்குவதும், சைவாலயம் ஒன்றிற்குச் சமீபமாக உள்ளதுமான கூட்டுறவு சங்கம் ஒன்றில் அத்தியாவசியப் பாவனைப் பொருள் விநியோகத்தில் சீர்கேடு நிலவுவதாக அதிருப்தி தெரிவிக்கப்படுகிறது.

இக்கிளையில் கடலைப்பருப்பு கடலை, நெத்தலிக்கருவாடு, லக்ஸ்பிறே மாசி என்பன நெடுங்காலமாகப் பாவனையாளர்களுக்கு விநியோகப்படுவதில்லையாம்.

காரணம் கேட்டால் நெத்தலிக்கருவாடு, மாசி விற்பது ஆலயத்தருகில் தகாது என அப்பாவி மக்களுக்கு பதிலளிக்கப்படுகிறதாம். [உ

## இடமாற்றம்

[பண்டத்தரிப்பு]

யாழ். மாவட்ட சுகாதார சேவை அத்தியட்சகர் காரியாலயத்தில் எழுதுவினைஞர்களாகக் கடமையாற்றிய திரு. எஸ். மகேந்திரராசா கொழும்பிலுள்ள பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சிற்கும், திரு. ஏ. பொன்னம்பலம் பதுளை சுகாதார சேவை அத்தியட்சகர் அலுவலகத்திற்கும் ஜனவரி மாதம் தொடக்கம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளனர்.

அதிபர் பதவி:

## விண்ணப்பங்கள் நிராகரிப்பு!

[யாழ்ப்பாணம்]

கடந்த மாதம் கோரப்பட்ட நாலாந்தர, ஐந்தாம்தர அதிபர் பதவிக்கான விண்ணப்பங்களில், 40 க்கும் அதிகமான விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

விண்ணப்பம் அனுப்பவேண்டிய கடைசித் திகதி டிசம்பர் 19 ந் திகதி என்று குறிப்பிடப்பட்டும், விண்ணப்பங்கள் 20 ந் திகதிதான் கல்விக் கந்தோருக்குக் கிடைத்தனவாம்.

பாதிக்கப்பட்ட ஆசிரியர்கள் 40 பேரும் தங்கள்மீது கருணை காட்டுமாறு வடமாநிலக் கல்விப் பணிப்பாளர் திரு. மாணிக்கவாசகரைக் கோரியுள்ளனர்.

மேற்படி பதவிக்காக விண்ணப்பிப்பதற்கு வட்டாரக் கல்வியதிகாரிகளிடம் சிபாரிசுக் கடிதம் பெறவேண்டியிருந்ததாலும் சம்பந்தப்படுத்தப்பட்ட அதிகாரிகள் பங்கீட்டுப் புத்தக நிரப்பு வேலைகளில் ஈடுபட்டிருந்ததாலும், சம்பந்தப்பட்ட 'கசெற்' ஒரு வாரத்தின் பின்னர்தான் கிடைத்ததினாலும் காலதாமதமேற்பட்டு விட்டதாகவும் விண்ணப்பதாரர்கள் தெரிவித்துள்ளனர். [செ]

நாகம்மாஸ்
(சுன்னாகம்)
தினசரி பி.ப. 6-45, 10-00
சனி, ஞாயிறு பி. ப. 2-30
எம்.ஜி.ஆர்-லதா
உழைக்கும் கரங்கள்

புலோலி சினிமாஸ்
(பருத்தித்துறை)
தினசரி 2-30, 6-30,
சிவாஜி-விஜயா
செல்வம்

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி: 2-30, 6-30, 9-30
சிவாஜி-விஜயா
ராமன் எத்தனை ராமனடி

# ஆலயம் சென்றவரை வழியில் சாவு அழைத்தது!

[மாவிட்டபுரம்]

சுவாமியை வழிபடுவதற்காகக் கோவிலுக்குச் சென்றவர் இடைவழியில் தடுக்கி விழுந்து மரணத்தைத் தழுவிக்கொண்டார்.

தெல்லிப்பழையைச் சேர்ந்த வேலாத்தை வைரவப்பிள்ளை [70 வயது] என்பவரே இவ்வாறு மரணமானவராவார்.

இவரது மரணம் குறித்து திடீர் மரணவிசாரணை அதிகாரி திரு. நா. தம்பிராசா விசாரணை நடத்தியசமயம், சம்பவதினம் கோவிலுக்குச் செல்வதற்காகப் புகையிரதப் பாதையின் அருகாமையால் சென்றுகொண்டிருந்த காலமானவர் திடீரெனத் தடுக்கி விழுந்ததையடுத்து பலத்த காயமடைந்து தெல்லிப்பழை அரசினர் ஆஸ்பத்திரிக்கு எடுத்துச் செல்லப்பட்டபோது அங்கு மரணமானதாகத் தெரிவிக்கப்பட்டது.

மரண விசாரணை அதிகாரி விபத்து மரணமெனத் தீர்ப்பளித்தார். சுன்னாகம் பொலிசார் சாட்சிகளை ஆஜர் செய்தனர். [உ]

வழக்காளியின்

# சட்டத்தரணியிடம் சலுகை கேட்டவர் றிமாண்டில்!

(கொடிகாமம்)

வழக்காளியின் சட்டத்தரணியிடம் சென்று, அதேவழக்கின் எதிராளி தனக்குச்சலுகை செய்யும்படி கோரினாராம்; முடிவு றிமாண்டாகிவிட்டது.

சாவகச்சேரி மாவட்ட நீதிமன்றத்தில் இச்சம்பவம் நடைபெற்றது.

இதுபற்றிய விபரம் இதுதான்.

கைதடியைச்சேர்ந்த இராசையா என்ற நபர்மீது அதே ஊரைச்சேர்ந்த ஒருவர், காணி சம்பந்தமான ஒரு வழக்கை தாக்கல்செய்திருந்தார். இந்த வழக்கில் வழக்காளி தரப்பில் சட்டத்தரணி திரு. நாகராஜா ஆஜராகியிருந்தார். வழக்கு சாவகச்சேரி மாவட்ட நீதிபதி திரு. கே. பாலகிட்டினர் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டிருந்தது.

அப்பொழுது எதிரி வழக்காளியின் சட்டத்தரணியிடம் சென்று தனக்கு சலுகைசெய்யும்படி கோரினர். சட்டத்தரணி திரு. நாகராஜா இச்சம்பவத்தை உடனடியாக நீதிபதியின் கவனத்துக்குக் கொண்டுவந்தார்.

நீதிபதிஎதிராளியைறிமாண்டில் வைக்க உத்தரவிட்டுவிசாரணையை ஒத்திவைத்தார் சட்டத்தரணியையும் சத்தியக்கடதாசி ஒன்று [illegible]க்கும்படியும் கேட்டுக்கொண்டார்.

திருமலையில்

# 39 திருட்டுச் சைக்கிள்கள் மீட்பு: ஒருவர் கைது

(திருகோணமலை)

திருகோணமலைப் பொலிசார் தமக்குக்கிடைத்த தகவல் ஒன்றினையடுத்து திருடப்பட்ட 39 சைக்கிள்களைக் கைப்பற்றியுள்ளனர்.

இதுதொடர்பாக நிஷாந்தி என்பவர் கைதுசெய்யப்பட்டிருக்கிறார்.

மேலும் திருட்டுச் சைக்கிள்களைக் கைப்பற்றலாம் என நம்பும் பொலிசார் சைக்கிள்களை உரிமையாளர்கள் அடையாளம் காட்டிப்பெற்றுக் கொள்ளலாம் எனவும் அறிவித்துள்ளனர். [உ]

# வீதியில் இறந்துகிடந்த 'ஆஸ்பத்திரி நோயாளி'

[யாழ்ப்பாணம்]

யாழ்ப்பாணம்பெரியாஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட நோயாளி ஒருவர், ஆஸ்பத்திரிக்கு முன்பாகவுள்ளபிரதான வீதியில் இறந்துகிடக்கக் காணப்பட்டார்!

யாழ். மரணவிசாரணை அதிகாரி திரு. எஸ். அமிர்தலிங்கம் நடத்திய மரணவிசாரணையில் மேற்கண்டவிபரம் தெரிய வந்தது.

இறந்தவரின் பெயர் ரிபொன்னையா என்றும், இவரை கொழும்புத்துறையை சேர்ந்த ஒருவர், ஆஸ்பத்திரியில் அனுமதித்ததாகவும், விசாரணையில தெரியவந்துள்ளது.

விசாரணை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. [அ]

## வயிற்று வலியைப்போக்க கிருமிநாசினி குடித்தாராம்

[நெல்லியடி]

வயிற்றுவலியைக் குணப்படுத்தப் பூச்சி கொல்லி மருந்தை உட்கொண்டவர் மந்திகை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவருகிறார்.

மந்திகை அர்சினர்வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட இவர் ஆஸ்பத்திரி பொலிஸில் அளித்துள்ள வாக்குமூலத்தில் பின்வருமாறு தெரிவித்துள்ளார்!

கடந்த 28ம் திகதி எனக்கு வயிற்றுவலி ஏற்பட்டது. தாங்கமுடியாதவேதனை என்னை வாட்டியது. அதனால் வீட்டில் இருந்த மருந்தொன்றை எடுத்துக் குடித்தேன். வயிற்றுவலியில் என்ன மருந்து அது என்று எனக்குத் தெரியாது. வயிற்று வலியே எனக்குப் பெரிதும் தெரிந்தது. நான் தற்கொலை செய்யும் எண்ணத்துடன் கிருமிநாசினியைக் குடிக்கவில்லை. தற்கொலை செய்ய வேண்டிய அவசியமும் எனக்கு இல்லை''. [அ]

## பெற்றோர் மரணவீடு செல்ல வீட்டில் மகள் தற்கொலை

[நெல்லியடி]

அயலில் மரண வீடொன்றுக்குப் பெற்றோர் சென்றிருந்த சமயம் அவர்கள் வீட்டிலேயே மரணம் நிகழ்ந்தது. இவ்வதிர்ச்சி தரும் பரிதாபச் சம்பவம் அல்வாய் தெற்கில் நிகழ்ந்தது. மரணமானவர் 20 வயது யுவதியான கன்னிகாதேவி என்பவராவர். கிருமிநாசினி அருந்தி அவர் தமது உயிரைப் போக்கிக்கொண்டார்.

இறந்த பெண்ணின் தந்தையான கனகசபை என்பவர் மரணவிசாரணையில் தெரிவித்ததாவது!

''இறந்தவர் எனது மகள். இவருக்கு இரண்டு மூத்த சகோதரிகள் உண்டு. அவர்கள் திருமணம் முடித்துவிட்டார்கள். இறந்த கன்னிகாதேவிக்கு 20 வயது. அவர் திருமணம் முடிக்கவில்லை. அவளுக்கு ஒரு சமயம் மனநோய் ஏற்பட்டது. இதனால் சில காலம் மனநோய் வைத்திய சாலையில் சிகிச்சை பெற்றுவந்தார். சம்பவம் நடந்த தினம் எமது கிராமத்தில் செத்தவீடு ஒன்று நடந்தது. நாம் எல்லோரும் செத்தவீட்டுக்கு போய்விட்டோம். கன்னிகா தேவி மட்டும் வீட்டில் இருந்தார். நாம் இல்லாத சமயத்தில் அவர் தோட்டத்திற்கென வைத்திருந்த கிருமிநாசினியை உட்கொண்டுவிட்டார் எனது மூத்த மகள் தான் முதலில் வீட்டுக்குத் திரும்பினர் அப்போது காலஞ்சென்றவர் தாம் கிருமிநாசினியை உட்கொண்ட விபரத்தைக் கூறினராம் எமக்கு ஆள் வந்து நாம் பார்த்த போது கன்னிகாதேவி இறந்துவிட்டார்.''

மற்றும் சாட்சியங்களைப் பதிவுசெய்துகொண்ட மரண விசாரணை அதிகாரி திரு எம் வி புவனேந்திரன் தற்கொலை எனத் தீர்ப்பளித்தார். (அ)

'ஈழநாடு'
தினக்குறிப்பு
1978
விற்பனையாகின்றது
விலை:- ரூபா 4-50 சதம்
வியாபாரிகளுக்கு கழிவுண்டு.
தொடர்பு கொள்ளவும்:-
கலாநிலையப் பதிப்பகம்
303. கே. கே.எஸ். வீதி — யாழ்ப்பாணம்
தொலைபேசி 7707
எஸ். கிருஷ்ணசுமி
(மார்க்கட்)
பெரியகடை யாழ்ப்பாணம்

இப்பத்திரிகை "ஈழநாடு" லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் இவன்லோவில் மேலை வீதி 68-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1978-ம் ஆண்டு ஜனவரி மாதம் 2-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The EelanaaduPost Box No. 49, Jaffna. Telegram Eelanaadu. Telephone 389. Registered as a Newspaper in Sri Lanka;

## இந்தத் தொழிலாளருக்கும் 'போனஸ்' கிடைக்கும்!

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையில் போனஸ் பணம்பெறத் தகுதியற்றவர்கள் என்ற காரணத்தினால் போனஸ்பணம் வழங்கப்படாத தொழிலாளர்களுக்கும் போனஸ்பணம்வழங்க இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனத் தலைவர் அங்கீகாரம் அளித்துள்ளார்

காங்கேசன்துறை சிமெந்து தொழிற்சாலையில் 1977-ம் ஆண்டுக்கான போனஸ்பணம் தொழிலாளர்களுக்கு வழங்கப்பட்டபோது 50 நாட்கள்வரையில் சம்பளமற்றலீவு எடுத்தவர்கள் போனஸ்பெறத் தகுதியற்றவர்கள் எனக்கருதப்பட்டு அவர்களுக்கு இப்பணம் வழங்கப்படவில்லை. அத்துடன் இதற்குக் குறைவான நாட்கள் சம்பளமற்றலீவு எடுத்தவர்களுக்கும் அந்த நாட்களுக்கேற்ப போனஸ்பணம் குறைக்கப்பட்டே வழங்கப்பட்டன

இதுகுறித்து மேற்படி தொழிற்சாலையைச் சேர்ந்த தொழிற்சங்கங்கள் இலங்கை சிமெந்துக் கூட்டுத்தாபனத் தலைவருக்கு புகார்தெரிவித்ததையடுத்து அவர் நேரில் தொழிற்சாலைக்கு விஜயம் செய்து இதுகுறித்து ஆராய்ந்தார்

இறுதியில் வரும் நான்கு மாதங்களுக்கு சம்பளமற்ற லீவு எடுக்கக் கூடாதென்ற நிபந்தனையுடன் இத்தொழிலாளர்களுக்கு போனஸ் பணம் வழங்க அவர் அங்கீகாரம் வழங்கியுள்ளார் இந் நிபந்தனையை மீறுவோரிடமிருந்து போனஸ்பணம் திருப்பி அறவிடப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (உ)

## எகிப்திய வெளியுறவு அமைச்சர் கருத்து

கெய்ரோ, ஜன. 1

இஸ்ரேலியத் துருப்புகள் கைப்பற்றப்பட்ட பிரதேசங்களில் இருந்து முற்றாக வெளியேறினால் மத்திய கிழக்கில் சமாதானம் சாத்தியம் என்று எகிப்திய வெளிநாட்டமைச்சர் தெரிவித்துள்ளார்.

—

## இன்று

[சுன்னாகம்]

சுன்னாகம் கத்தோலிக்க இளைஞர்மன்றத்தின் வருடாந்த விளையாட்டுப்போட்டி இன்று காலை புனித அந்தோனியார் ஆலய முன்றலில் நடைபெறுகின்றன. விழாவிற்கு அருட்திரு சூசைப்பிள்ளை அடிகளார் தலைமை வகிப்பார்.

மாலை நடைபெறும் பரிசளிப்புவைபவத்தில் எதிர்க்கட்சித் தலைவர் அ. அமிர்தலிங்கம் பிரதமவிருந்தினராகக் கலந்துகொள்வார். மானிப்பாய் தேசியபேரவை உறுப்பினர் திரு. வி. தர்மலிங்கம், உதவிஅரசாங்க அதிபர் திரு. அ. குமாரசாமி உட்பட பலர் உரையாற்றுவர். (கெ)

......

## எரிகாயங்களுக்கு பலியானார்

(யாழ்ப்பாணம்)

அடிக்கடி வலியினால் பாதிக்கப்பட்ட ஒருபெண், எரிகாயத்திற்கு பலியானார்.

சுன்னாகத்தைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை தங்கமலரின் (36 வயது) மரண விசாரணையில் மேற்கண்ட விபரம் தெரிய வந்தது.

யாழ் மரண விசாரணை அதிகாரி திரு. எஸ் அமிர்தலிங்கம் மரணவிசாரணை நடத்தினர். கைகால் எரிந்தநிலையில், ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்ட இப்பெண் அங்கு மரணமானார். விபத்து மரணம் எனத் தீர்ப்பளிக்கப்பட்டது.

## ஆசிரிய நியமனங்கள்: சிபார்சு வழங்குவதில் பாரபட்சம்!

### பண்டிதர் கண்டனம்

[யாழ்ப்பாணம்]

"ஆசிரிய நியமனங்கள் குறித்து சிபார்சு வழங்கும்படி கல்வியமைச்சர் பணித்திருப்பதற்கு நாம் மறுப்புத் தெரிவித்துள்ளோம். தொகுதிப்பங்கீட்டில் பாகுபாடு காட்டப்படுவதே இதற்குக் காரணமாகும். இதை அடிப்படையாக வைத்து அரசின் ஆதரவாளர்களின் பொய்யான தகவல்களுக்கு ஏமாற்றமடைந்து பணத்தை விரயமாக்காதீர்கள் எனக் கேட்டுக்கொள்கின்றேன்'' என்று திவுபகுதி எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் கேட்டுள்ளார்.

அல்லைப்பிட்டி கிறிஸ்தவ ஆலயத்திலிருந்து புதிய பஸ் சேவையொன்றை ஆரம்பித்து வைக்கும் வைபவத்தில் பேசுகையிலேயே பண்டிதர் கா. பொ. இரத்தினம் மேற்கண்டவாறு கூறினர். இவ்வைபவத்திற்கு திரு க. தவிநாயகம் தலைமை வகித்தார்.

பண்டிதர் கா. பொ. இரத்தினம் தொடர்ந்து கூறியதாவது: தமிழ்ப் பிரதிநிதிகளுக்கு 10 பேரை சிபார்சு செய்யும்படியும் சிங்கள பிரதிநிதிகளுக்கு 20 பேரை சிபார்சு செய்யும்படியும் கோரியிருப்பது நியாயத்துக்கு மாறானது. எமக்கும் 20 பேரை சிபார்சு செய்யும்படி பணிப்புரை செய்யுமாறு கோரியுள்ளோம். அப்படி நடைமுறை வரும் போது திறமைக்கும் தகுதிக்கும், கிராமங்களுக்கும் வழி சமைப்போம்.

"யாழ்ப்பாணத்துக்கு 25 புதிய பஸ்களை இம்மாதம் போக்குவரத்து அமைச்சு அனுப்பவுள்ளது. பன்வண்டிகளை எந்தும் தீவுப்பகுதி பஸ்சேவை நவீனமயமாக்கப்படும்.

இவ்வைபவத்தில் யாழ். டிப்போ அத்தியட்சகர் திரு. எஸ். தியாகராஜாவும் உதவி அத்தியட்சகர் திரு. கே. சொக்கலிங்கமும் கலந்துகொண்டனர். (கெ)

## இ.போ.சபை பன்முகப்படுத்தப்படும்

(கொழும்பு)

இலங்கைப் போக்குவரத்துச் சபை சேவை பன்முகப்படுத்தப்படவிருக்கிறது.

எட்டு பிராந்திய அதிபர்கள் கொண்ட சபை அமைக்கப்படும். இம்முறை பெப்ரவரி முதல் அமுலுக்கு வரும்.

இதேவேளை தனியாரிடம் சபை ஒப்படைக்கப்படமாட்டாது என்பதை போக்குவரத்து அமைச்சர் ஜனப் எம் எச். மொஹமத் மீண்டும் வலியுறுத்தியுள்ளார். [உ]

## நிவாரண...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

களின் கச்சேரிகளுக்குச் சென்று உதவிப் பணம் பெறுமாறு கோருவது மனிதாபிமானமற்ற செயலாகும். இச்செயல், தமிழ்பேசும் மக்களை மீண்டும் பலிக்கடாக்களாக்கி; அவர்கள் தமது பொருள்களையும் இழந்து உயிரையும் இழப்பதற்குச் சமமாகும்.

"பாதிக்கப்பட்ட அனைவரும் தமது உழைப்பையும் இழந்து யாழ்ப்பாணத்தில் அகதிகளைப் போல உறவினருடன் வாழ்வதால், இவர்களுக்கு அரசு கருணைகாட்ட வேண்டும்.

"புங்குடுதீவைச் சேர்ந்த இ. கமலநாதன், க. திருச்செல்வம் ஆகியவர்களுக்கு கடந்த மாதம் 20ம் திகதி நிவாரணநிதியைப் பெற்றுக்கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டிருந்தது. ஆனல் இவர்கள், யாழ்ப்பாண செயலகத்தில் மூன்று தினங்கள் அரசாங்க அதிபரின் சிபாரிசை பெறுவதற்கு அலைந்து திரிந்து கடைசியில் அரசாங்க அதிபர் பாதிக்கபபட்ட மாவட்ட கச்சேரிகளுக்கு போய் பெற்றுக்கொள்ளுமாறு பணிப்புரை செய்துள்ளாராம்'' இது மனிதாபிமானமற்ற செயலாகும்'' என்று தமது மகஜரில் பண்டிதர் தெரிவித்துள்ளார். (கெ)

## கார்ட்டர்..

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ததும் அவருக்கு உற்சாகமான வரவேற்பு அளிக்கப்பட்டது. பிரதமரும், ராஷ்டிரபதியும் முன்னின்று வரவேற்கபாராளுமன்ற உறுப்பினர்கள், அரசாங்க உயர் அதிகாரிகள், வெளிநாட்டுத் தூதர்கள் ஆகியோர் மகிழ்ச்சியுடன் வரவேற்றனர். 21 தடவைகள் பீரங்கிகள் முழங்கிக் கொண்டிருக்க, இருநாட்டுத் தேசிய கீதங்களும் இசைக்கப்பட்டன. இதனைத் தொடர்ந்து முப்படைகளின் அணிவகுப்பை அதிபர் கார்ட்டர் பார்வையிட்டார். அதிபருடன் அவரது துணைவியார் திருமதி ரோஸ்லின் கார்ட்டரும் வந்திருந்தார்.

விமான நிலையத்திலிருந்து ராஷ்டிரபதி பவன் செல்லும் வழிநெடுகிலும் பெரும் அலங்கார வளைவுகள் அதிபர் கார்ட்டரின் பெரிய அளவு புகைப்படத்துடன் காணப்பட்டன. வழிநெடுகிலும் மக்கள் பெருமளவில் கூடிநின்று மகிழ்ச்சி ஆரவாரம் செய்தனர். அதிபரும் சிரித்தமுகத்துடன் வரவேற்பை ஏற்றுக்கொண்டார்.

உத்தியோகபூர்வமான பேச்சுக்கள் ராஷ்டிரபதி பவனில் நடைபெறுகிறது.

## தாலிக்கொடி...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

ரணையை மேற்கொண்ட சங்கானை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி இராசையாவும், பொலிஸ் கன்ஸ்டபிள் குணரத்தினவும் சந்தேகத்தின் பேரில் ஒருவரை கைதுசெய்துள்ளனர்

விசாரணை தொடர்ந்து நடைபெறுகின்றது.

## வடக்கு...

[1ம் பக்கத் தொடர்ச்சி]

களில் தமிழில் விசாரணை நடத்தவும், அரசியல் சாசனத்தில் திருத்தம் கொண்டுவரப்படவேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.